நாள். 13.02.2023

M.C.No. 08/2022

மா.சா. 1

திரு. கே.சேகர், Chief staff and welfare inspecter, Salem divisional, Southern railway

க/பெ.

சத்தியப்பிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

1. நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் தற்போது சாட்சியமளிக்க வந்துள்ளேன். நான் இவ்வழக்கில் சாட்சியமளிப்பதற்கு Senior divisional personal officer வழங்கிய அனுமதி கடிதமானது **X1 சான்றாவணமாகும்**. இவ்வழக்கு எதிர்மனுதாரர் திரு.மாரியப்பன், சேலம் Divisional Southern railway ல் Mail/ Express train manager ஆக 01.03.2005 ல் இருந்து பணிபுரிந்து வருகிறார்.

2. 07.02.2015 தேதியிட்ட எதிர்மனுதாரரின் Family composition குறித்த விவரம் நகலானது அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது **X2 சான்றாவணமாகும்.**

3. 01.07.2017 தேதியிட்ட எதிர்மனுதாரரின் Family composition குறித்த விவரம் நகலானது அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது **X3 சான்றாவணமாகும்.**

4. 01.02.2019 தேதியிட்ட எதிர்மனுதாரரின் Family composition குறித்த விவரம் நகலானது அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது **X4 சான்றாவணமாகும்.**

5. 18.03.2020 தேதியிட்ட எதிர்மனுதாரரின் Family composition குறித்த விவரம் நகலானது அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது **X5 சான்றாவணமாகும்**.

6. 01.01.2022 தேதியிட்ட எதிர்மனுதாரரின் Family composition குறித்த விவரம் நகலானது அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது **X6 சான்றாவணமாகும்**.

7. அவருடைய தற்போதைய மொத்த சம்பளமானது 2023 ஜனவரி மாதத்தில் ரூ. 1,41,801/– ஆகும். பிடித்தம்போக அவருடைய சம்பளமானது ரூ. 79,763/– ஆகும். நான் நீதிமன்ற உத்தரவுப்படி எதிர்மனுதாரரின் ஆறு மாத சம்பளம் குறித்த எதிர்மனுதாரரின் ஜீலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதத்திற்கான Pay Slip சான்றிட்ட நகலானது **X7 சான்றாவணமாகும்**. எண்ணிக்கைகள் 7.

8. எதிர்மனுதாரரின் பணி பதிவேடு சான்றிட்ட நகல் **X8 சான்றாவணமாகும்**.

X7 சான்றாவணமானது குறியீடு செய்யும்போது கன்சாலிடேட்டாக இல்லாததால் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார்.மேற்படி ஆட்சேபனையின் தீர்வானது தீர்ப்பின்போது தீர்மானிக்கப்படும்.

**குறுக்கு விசாரணை**

1. எதிர்மனுதாரர் இரயில்வே துறையில் எவ்வாறு பணியில் அமர்த்தப்பட்டார் என்றால் எதிர்மனுதாரரின் தகப்பனார் பணியில் இருக்கும்போது காலமாகிவிட்டபடியால் வாரிசுரிமைப்படி பணியில் அமர்த்தப்பட்டுள்ளார். கருணை அடிப்படையில் எதிர்மனுதாரர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளதாக x8 சான்றாவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு நபர் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால் அந்நபரின் வாரிசுகளுக்கு கல்வித்தகுதியின் அடிப்படையில் அரசு வேலை வழங்கப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட நபருக்கு மற்ற வாரிசுகள் ஆட்சேபனை இன்மை சான்றிதழ் வழங்க வேண்டும் என்றால் சரிதான்.

2. 2016 ம் வருடத்தில் இருந்து எதிர்மனுதாரர் Family composition இருந்து 1ம் மனுதாரரின் பெயரானது நீக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதனடிப்படையில் அவ்வாறு பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் விவாகரத்து தீர்ப்பின் அடிப்படையில் பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. 2, 3 மனுதாரர்களின் பெயரானது Family Composition குறித்த விவரத்தில் தொடர்ந்து இருந்து வருகிறது என்றால் சரிதான்.

3. இரயில்வே துறை ஊழியர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறக்கும்போது கூடுதலாக பணி உயர்வு ஏதேனும் வழங்கப்படுமா, கூடுதல் சம்பளம் எதுவும் வழங்கப்படுமா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள டிசம்பர் 2022 சம்பளப்பட்டியலில் Net pay ஆனது ரூ. 1,03,595/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நவம்பர் 2022 சம்பளப்பட்டியலில் Net pay ஆனது 80,649/- என்றும், ஜனவரி 2023 ல் சம்பளப்பட்டியலில் Net pay ஆனது 79,763/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். Net pay ஆனது ஏன் ஒவ்வொரு மாதத்திற்கும் முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்றால் எதிர்மனுதாரர் ஓவர் டைம் ஒர்க், கிலோமீட்டர் ஓட்டும் போது மேற்படி தொகையானது வேறுபடும். மேற்படி Net pay ஆனது எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருக்காது என்றால் சரிதான். Basic Salary மட்டும் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கும்.

4. அதேபோல் Increment ம் வருடா வருடம் போடப்படும். எதிர்மனுதாரரின் Basic Salaray எவ்வளவு என்றால் 53600/- ஆகும். இது தான் நிரந்தர வருமானம் என்றால் increment போடும் பட்சத்தில் Basic salary ம் உயரும். House rent ஆனது Quarters வழங்கப்படும் பட்சத்தில் கிடைக்காது என்றால் சரிதான். House rent ஆனது ரூ. 12917 ஆகும். Gross Salary ஆனது அனைத்து தொகைகளையும் உள்ளடக்கியது என்றால் சரிதான்.

5. Gross Salary யை ஒட்டுமொத்தமாக கையில் வழங்கப்படாது என்றால் சரிதான். அதேபோல் எதிர்மனுதாரர் அவர் வாங்கும் சம்பளத்திற்கு ஏற்ப வருமான வரி பிடித்தம் செய்யப்படும் என்றால் சரிதான். அதேபோல் எதிர்மனுதாரரின் சம்பளத்தில் Society கடனாக மாதம் ரூ. 13240/- பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது என்றால் சரிதான். கொரான காலகட்டத்தில் இரயில்கள் ஓடாத காரணத்தினால் எந்தவித படியும் இரயில்வே ஊழியர்களுக்கு 2019, 2020, 2021 காலகட்டத்தில் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். அப்போது எதிர்மனுதாரருக்கு Net salary ஆக ரூ.18000, 24000/- என்று மிகவும் குறைவாக வழங்கப்பட்டது என்றால் Net salary அனைவருக்கும் குறைவாக தான் வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி தொகையானது துல்லியமா என்பது குறித்து எனக்கு தெரியாது.

6. இரயில்வே ஊழியர்களின் சம்பளப்பட்டியலானது எங்களுக்கென உள்ள App ல் பதிவேற்றம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட நபர்கள் மற்றும் எங்களது அலுவலகம் மூலம் பார்த்துக்கொள்ளலாம் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

விவாகரத்து தீர்ப்பின் உத்தரவானது மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் இரத்து செய்யப்படும் பட்சத்தில் Family composition உள்ள பதிவுகளானது தீர்ப்பின் அடிப்படையில் மீண்டும் பதிவு செய்யப்படும் என்றால் அது எதிர்மனுதாரரின் விருப்பத்தை பொறுத்ததாகும்.